தியாகராயர் நகரில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் உள்ளிட்ட பகுதிகளில் வசிப்போர்க்கு பட்டா வழங்கிட வேண்டும்!

# தியாகராயர் நகர் பேருந்து நிலையத்தை தரம் உயர்த்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் – ஜெ.கருணாநிதி கோரிக்கை!

**சென்னை, ஏப்.11– சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தியாகராயர் நகர் தொகுதி கழக உறுப்பினர் ஜெ. கருணாநிதி, “தியாகராயர் நகர் தொகுதி – நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் வசிப்போருக்கு பட்டா வழங்கிட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றும், “தியாகராயர் நகர் பேருந்து நிலையத்தை தரம் உயர்த்திட வேண்டும்” என்றும் கோரிக்கை விடுத்தார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

தமிழக ஆளுநரின் செயல்பாடுகள் சட்டவிரோதமானது என்று உச்சநீதிமன்றம் வரை சென்று, சட்டப் போராட்டம் நடத்தி, மாநில சுயாட்சியை வென்றெடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், அனைத்து உயிர்களின் நலனுக்காகவும், சமத்துவ மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் திராவிட நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இளைய சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் எங்கள் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகராயர் நகர் தொகுதியில், எனது வெற்றிக்காக உழைத்திட்ட மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு அவர்களுக்கும், மேற்கு பகுதி செயலாளர் ஏழுமலை அவர்களுக்கும், தொகுதியிலுள்ள 14 வட்டக் கழகச் செயலாளர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சியைச் சார்ந்த கழகத் தோழர்களுக்கும், தேர்தலுக்கு உழைத்ததை விட இன்றும் மிக அதிகமாக மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிற அவர்களுக்கு, இந்தக் கடுமையான உழைப்பிற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிர்வாகச் சீர்கேட்டினால் தவித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டை இன்று 9.69 சதவிகித பொருளாதார வளர்ச்சி என்னும் நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறார் நமது முதலமைச்சர் அவர்கள். அவருக்கு உறுதுணையாக இருந்த தமிழக துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் தெரியாத வடமாநில ஊடகங்கள்கூட இன்று இந்தச் செய்தியை நாடு முழுவதும் சொல்கிறது. இது பெரும் வரலாற்றுப் புரட்சியாகும். இந்தப் புரட்சியைச் செய்துகாட்டிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையும், திறன் மேம்பாட்டுத் துறையும் நமது திராவிட மாடல் அரசின் முயற்சிகளால் பெரும் வளர்ச்சி அடைந்து வருகிறது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. *'making skills democratic makes society richer'* என்பார்கள். அதாவது, திறன் மேம்பாட்டுப் பயிற்சியை அனைவருக்கும் வழங்கினால், அந்த சமுதாயம் பொருளாதாரரீதியில் பெரும் முன்னேற்றங்கள் அடையும் என்பது அதன் பொருளாகும். திறன் மேம்பாட்டுத் துறையை கடைக்கோடி மக்கள் வரை பயனடையும்படி விரிவாக்கம் செய்து, சாதனை படைத்துள்ளது நமது திராவிட நாயகரின் அரசு. அப்படிப்பட்ட இந்த துறை களச்சார்ந்த சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன்.

**ரூ.1 கோடியாக உயர்த்துக!**

49 இலட்சம் தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் NEEDS திட்டத்தில் வழங்கப்படும் மூலதன மானியத்தின் உச்ச வரம்பை ரூபாய் 75 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தினால் முதல் தலைமுறைத் தொழில் முனைவோர்களுக்கு பெரும் ஊக்கமாக இருக்கும். Green MSME என்னும் திட்டத்தில் அறிமுகப்படுத்தி சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பில்லாத தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தனிப்பட்ட மானியங்களும் Tamil Nadu Credit Guarantee Schemeல் முன்னுரிமை அளிக்கப்பட்டால் இது சார்ந்த தொழில்கள் வளரும். குறு, சிறு தொழில் நிறுவனங்கள் I.S.O. சான்றிதழ் பெறுவதை அரசு ஊக்குவிக்க சிறப்புத் திட்டங்கள் மற்றும் மானியங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்தியாவிலேயே அதிக I.S.O. தரச் சான்றுகள் பெற்ற குறு, சிறு தொழில் நிறுவனங்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடு தான் என்னும் நிலைமை வந்தால் அது நமது *one trillion dollar* பொருளாதாரம் எனும் இலட்சியத்தை அடைய பெரும் உதவியாக இருக்கும். முதலீட்டாளர்கள் மத்தியிலும் நமது மாநிலம் தனித்துவமாக இருக்கும். தொழில் துறையும், திறன் மேம்பாட்டுத் துறையும் இணைந்து என்னுடைய தியாகராயநகர் தொகுதியில் ஒரு பெரும் வேலை வாய்ப்பு முகாமை நடத்தினால் தொகுதி மற்றும் தொகுதிக்கு அருகிலுள்ள பல இளைஞர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். புதிய குறு, சிறு தொழில்முனைவோர்களுக்கு உதவ மற்றும் வழிகாட்ட AI தொழில்நுட்பத்தைக் கொண்ட தானியங்கி வழிகாட்டுதல் சேவையை நிறுவினால் புதிய தொழில் முனைவோருக்கு பெரும் உதவியாக இருக்கும். ஆகையால், மேற்கண்ட கோரிக்கைகளுக்கு நடவடிக்கை எடுக்கும்படி, அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**முதல்வருக்கு நன்றி!**

தொகுதியில் நிறைவேற்றப்பட்ட பணிகள். 2021 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில் கழக ஆட்சி வந்தால் உஸ்மான் சாலையில் மேம்பாலம் கட்டித் தருவோம் என்று முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். இன்று அதை நிறைவேற்றியும் விட்டார். இதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2021 ஆம் ஆண்டு நமது



கழக ஆட்சி வந்தபோது, சென்னையில் பெரும் மழை பெய்தது. கடந்த ஆட்சியில் *smart city* என்ற பெயரில் நடந்த விளைவாக தியாகராய நகர் பெரும் வெள்ளத்தில் மூழ்கியது. முதலமைச்சர் அவர்கள் இரண்டுமுறை தியாகராயநகரைப் பார்வையிட்டு, மழைநீர் தேங்காமல் இருக்க புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். (குறுக்கீடு) அதன்படியே தொகுதி முழுவதும் பல இடங்களில். . . (குறுக்கீடு)

முதலமைச்சர் அவர்கள் இரண்டுமுறை தியாகராய நகர் தொகுதியைப் பார்வையிட்டு, மழைநீர் தேங்காமல் இருக்க புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். அதன்படியே இன்று தொகுதி முழுவதும் பல இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் விளைவாக 2024 ஆம் ஆண்டு பெய்த கனமழையின்போது தொகுதியில் பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேங்காமல் சென்றுவிட்டது. அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தியாகராயநகர் தொகுதி ஒரு வியாபார ஸ்தலமான தொகுதி. இத்தொகுதியில் இருக்கும் பேருந்து நிலையம் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் பேருந்து நிலையமாகும். அந்தப் பேருந்து நிலையத்தை மேம்படுத்தித் தருவேன் என்று உறுதியளித்தார். அதை நிறைவேற்றிடும் வண்ணம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் நிதி ஒதுக்கப்பட்டு உடனடியாகப் பணிகள் துவங்கப்படவுள்ளன.

சொன்னதைச் செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், நடவடிக்கை எடுத்த இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, எனது தொகுதிக்குட்பட்ட அசோக்நகர் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டும் பணியும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 13.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அசோக் நகர் *11th Avenue*ல் மாவட்ட நூலகத்தை இடித்துவிட்டு, நவீன நூலகம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படவிருக்கிறது.

இதுபோன்ற பல வளர்ச்சிப் பணிகள் எனது தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2026 தேர்தலில் முதலமைச்சர் அவர்கள் தியாகராயர் நகர் தொகுதி தேர்தல் பரப்புரைக்கு வரும்போது, அந்தத் தேர்தல் பரப்புரை மக்களுக்குக் கொடுக்கும் நன்றி அறிவிப்புக் கூட்டமாக மாறும் என்ற வரலாறு தியாகராய நகரில் நடக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதியில் 10 ஆண்டுகளாக எந்த மேம்பாட்டுப் பணிகளும் நடைபெறாமல் இருந்தன. நமது முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இன்று திரும்பிய இடங்களிலெல்லாம் மாநகராட்சி மற்றும் அரசு சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். என் தொகுதி யின் கோரிக்கைகள் சிலவற்றை முன்வைக்க விரும்புகிறேன்.

தியாகராய நகர் தொகுதியில் 130, 131, 135, 140 ஆகிய வார்டுகளில் உள்ள சில பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்துத் தர வேண்டும். 134வது வார்டு, மேற்கு மாம்பலம் பகுதியில் உள்ள பாபு இராஜேந்திர பிரசாத் தெருவில் மழைக் காலங்களில் அதிக மழைநீர் தேங்குவதால், சுற்றியுள்ள பகுதிகளில் தேங்கும் நீர் இதன்வழியே கலந்து, மேட்லி சுரங்கப் பாதையை மூடுவதால், சுரங்கப் பாதை அடிக்கடி மூடப்படுகிறது. இதனால் மக்கள் பெரிதும் பாதிப்படைகிறார்கள். இது போன்ற சவாலான பகுதிகளுக்கு ஒரு சிறப்புக் குழுவை அமைத்து, தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கழிவுநீர் குழாய்களை மாற்றி அமைத்திடுக!**

தொகுதி முழுவதும் பல இடங்களில் உள்ள கழிவுநீர்க் குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. எனவே, இந்த கழிவுநீர்க் குழாய்களை மாற்றுவது மட்டுமின்றி, அகலமான குழாய்களாகவும் மாற்றினால் எதிர்காலத்திற்கும் பயன்தரும். எனவே, இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மக்கள் சிறிதளவிலும், நடுத்தர மக்கள் அதிகளவிலும் வசிக்கும் தொகுதி என்னுடைய தொகுதி. நமது அரசின் நாடே போற்றும் திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு விண்ணப்பித்த அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பல பகுதிகளுக்கு பட்டா வழங்க வேண்டுமென்ற எனது கோரிக்கையை பேரவைத் தலைவர்வாயிலாக நினைவூட்ட விரும்புகிறேன். சமீபத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் MUDP திட்ட வசிப்பாளர்களுக்கு பட்டா வழங்கவும், விற்பனைப் பத்திரங்கள் வழங்கவும் முகாம் நடத்தப்பட்டது. இப்பணியை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக, நில அளவைப் பணியில் அதிகாரிகளை உட்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். தியாகராய நகர் தொகுதி 141வது வார்டு, Corporation Colony 1வது தெரு பகுதியில் பட்டா வழங்க ஏதுவாக, சென்னை மாநகராட்சியிடமிருந்து தடையில்லாச் சான்று கோரப்பட்டுள்ளது. மேலும், 132வது வார்டு, கோபுரம்பாக்கம் காமராஜர் காலனியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய இடத்தின் பெயர் பிற அட்டவணைகளில் பூபதி நகர் என பெயர் மாறியுள்ளது. இதற்கும் சென்னை மாநகராட்சியிடமிருந்து தடையில்லாச் சான்று தேவைப்படுகிறது. ஆகவே, சென்னை மாநகராட்சி, இந்த இரண்டு தடையில்லாச் சான்றுகளையும் வழங்கி, மக்கள் பட்டா பெறுவதற்கு தடையில்லாத சூழலை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது தவிர, கிராம நத்தம் போன்ற பிற நில வகைகளும் தியாகராயர் நகர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ளன. அதில் வசிக்கும் மக்களுக்கும் விரைந்து பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் சமமாக வாழ வேண்டும், அனைத்துக் குழந்தைகளும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்று தாயுள்ளத்துடன் நமது கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட முத்தான திட்டம்தான் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள். தியாகராய நகர் தொகுதியில் 141 வது வார்டு, காமராஜர் காலனியில் லலிதாபுரம், 134 வது வார்டு, பிருந்தாவனம் காலனி, பூபதி நகர் மற்றும் காமராஜர் காலனி ஆகிய திட்டப் பகுதி குடியிருப்புகளில் கட்டடங்கள் பலவீனமாக உள்ளன. இவற்றை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்யவேண்டிய நிலையில் உள்ளதாகவும் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக, பலமுறை கடிதங்கள் மூலமாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்தும் கோரிக்கை வைத்திருக்கிறேன்.

வாரியத்திடமிருந்து நல்ல அறிவிப்பு வருமென்று காத்துக் கொண்டிருந்தேன், காத்துக் கொண்டேயிருக்கிறேன். இனியும் காத்திருக்கும் சூழல் இருக்காது என்ற நம்பிக்கையில் வாரியத்திடம் மீண்டும் கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். மேற்கண்ட திட்டப் பகுதிகளை இடித்துவிட்டு புதிதாகக் கட்டுவதற்கு அறிவிப்புகள் வழங்க வேண்டுமென்று, கேட்டுக்கொள்கிறேன்.

**நான் வைத்த கோரிக்கை நன்றி அறிவிப்பாக வேண்டும்!**

நான் தற்போது வைத்த கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் உதவிசெய்து, நமது முதலமைச்சர் அவர்கள் 2026ல் தியாகராய நகர் தொகுதி சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக்கு வரும்பொழுது, மக்களுக்குக் கொடுக்கும் நன்றி அறிவிப்பாக அதனை மாற்றிட உதவுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒரு முக்கியமான கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். மறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் இதயத்திலும், தலைவர் அவர்களின் உற்ற தோழனாகவும், போர்ப்படைத் தளபதியாகவும் பணியாற்றிய, கொரோனா காலத்தில் மக்களுக்காக உழைத்து, பல்வேறு நலத் திட்ட உதவிகளைச் செய்து, உயிர் நீத்த எனது அண்ணன், மறைந்த மாவீரன் ஜெ. அன்பழகன் அவர்களுக்கு தியாகராய நகர் தொகுதியில் ஒரு புதிய மேம்பாலம் அமைய வேண்டும் என்பது கனவாக இருந்தது.

திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடன், முதல்வர் அவர்கள் வழியாக அவரது கனவை நிறைவேற்ற வேண்டுமென்று, அதுகுறித்த கோரிக்கையை முதலமைச்சர் அவர்களிடம் முன்வைத்தேன். முதலமைச்சர் அவர்கள் உடனே அதற்கு உத்தரவிட்டதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மேம்பாலம் இன்று முடியும் தருவாயில் உள்ளது. அந்த மேம்பாலத்திற்கு மறைந்த சட்டமன்ற உறுப்பினர் எனது அண்ணன் ஜெ. அன்பழகன் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்ற கோரிக்கையை பேரவைத் தலைவர்வாயிலாக முதலமைச்சர் அவர்களின் முன் வைத்து கேட்டுக்கொள்கிறேன்.

இப்பேரவையில் பேச அனுமதி தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். வாழ்க திராவிடம், வாழ்க சமத்துவம். நன்றி, நன்றி, நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறுஜெ.கருணாநிதி பேசினார்.



காஞ்சிபுரம் தொகுதியில் 6 புதிய நவீன பேருந்துகளை கொடியசைத்து மக்கள் பயன்பாட்டிற்கு காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் இயக்கி வைத்தார். உடன் மாவட்ட பொருளாளர் சன்பிராண்டு கே.ஆறுமுகம், எஸ்.சிகாமணி, மேயர் மகாலட்சுமி, யுவராஜ், பகுதி செயலாளர்கள் கே.திலகர், எஸ் .சந்துரு, சு.வெங்கடேசன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.எம்.குமார் மற்றும் மாநகராட்சி ஆணையர் போக்குவரத்து பொது மேலாளர் போக்குவரத்து ஊழியர்கள் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, கயிலாசபுரம், 125வது வட்டம் ஐ.ஜி.அலுவலகம் அருகில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன் தலைமையில், பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி மற்றும் தூத்துக்குடி எஸ்.ஜோயல், ராஜா அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் வட்டச் செயலாளர் அ.தவநேசன், அ.ரேவதி, தினேஷ் மாணிக்கம், எஸ்.உமாசங்கர், டான்ட்டி பிரகாஷ், ஏ.அஸ்வின் குமார், டி.ஜெகதிஸ்பாபு, வி.திவான்குமார், தா.தீபன், வி. ஹேமந்த்குமார், பா.முருகேசன், எம்.நிரஞ்சன் சாய், சுந்தர் ரகு, அஸ்வின் பாபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் ஏற்பாட்டில் – ஆர்.டி. மதன்குமார் முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் நீர் மோர் பந்தல்!

## புழல் எம். நாராயணன் தலைமையில் தூத்துக்குடி எஸ். ஜோயல் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.13-

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் நீர் மோர்பந்தல்திறக்கப்பட்டது.

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில், 16வது வட்டம்மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். டி. மதன்குமார் முன்னிலை வகித்தார்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமை தாங்கினார்.

நீர் மோர் பந்தலில் மோர், வெள்ளரிக்காய், தர்பூசணி, இளநீர், ஆகியவை வழங்கப்பட்டன.

கழக இளைஞரணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல் கலந்து கொண்டு 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, மற்றும் பழ வகைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், கேபிள் த. வே. கணேசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன்,

19 ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் ,மாதவரம் வடக்கு பகுதி நிர்வாகிகள் பகுதி துணை செயலாளர் கே. சிவசங்கரன், மாவட்ட பிரதிநிதிகள் நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி. தரணி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எஸ். கருணாகரன், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், வட்டக் கழக நிர்வாகிகள் இ. அருள்,இ. வெங்கடேசன், பரசுராமன், குமரவேல், புவனேஸ்வரி மகேஷ்குமார், கே. ஏ. ரமேஷ்,மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ர. விஜய் ஆனந்த், தெற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் வினோத், வழக்கறிஞர் எம். என் .அஜய் தென்னவன், ஏ. விஜயன், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், ஜி. ராஜேஷ் கண்ணன், அ.சாந்தகுமார்

மணலி புது நகர் சி. எம். ராஜா, சடையங்குப்பம் நைனியப்பன், குளக்கரை மஞ்சுநாதன், காமராஜ்புரம் எம். கிருபாகரன், செமின் எடிசன், நித்தியானந்தம், ரூப் குமார், மகாலட்சுமி, யாசின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் செய்திருந்தார்.

# தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் பொது ஊழியர்கள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் பொது ஊழியர்கள் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். **3410/CNI**, பேரவை இணைப்பு எண்.629) பொதுச்செயலாளராக இருந்த ப.குமார் அவர்கள் மறைவினையடுத்து அச்சங்கத்தின் பணிகள் தொய்வில்லாமல் நடைபெற கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக அறிவிக்கப்படுகிறார்கள்.

**நிர்வாகிகள் பட்டியல்**

| | |
|---|---|
| தலைவர் | - வெ. பாபு மாணிக்கராஜ் |
| பொதுச்செயலாளர் | - G. சத்தியகுமார் |
| பொருளாளர் | - D. கன்னியப்பன் |

ஏற்கனவே உள்ள நிர்வாகிகள் இணைந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கலைஞரகம்**
சென்னை - 17
நாள்:10.04.2025

**(மு.சண்முகம்,MP)**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை



மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் ஏற்பாட்டில்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில், நீர் மோர் பந்தலை கழக இளைஞரணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி, நீர் மோர், மற்றும் குளிர்பானங்களை வழங்கினார்.இந்த நிகழ்ச்சியில் சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், கேபிள் த.வே.கணேசன், டி.ஜி.ஆர்.மணிவண்ணன், கே.சிவசங்கரன், நா.மோகன் குமார் நாகூரார், பா.சந்திரன், பி.தரணி, எஸ்.கருணாகரன், எஸ்.உதயகுமார், இ.அருள், இ.வெங்கடேசன், பரசுராமன், குமரவேல், புவனேஸ்வரி மகேஷ்குமார், கே.ஏ.ரமேஷ், செமீன் எடிசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்.